தமிழ்நாடு முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஆகஸ்ட் 15ம் தேதி கீழ்பவானி பாசன வாய்க்காலில் விவசாயத்திற்காக தண்ணீர் திறக்கப்பட உள்ளது. ஏரங்காட்டூர் வாய்க்காலில் நடைபெற்று வரும் சீரமைப்பு பணிகளை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சுன்கரா உள்ளிட்ட பொது பணித் துறை அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலனூர் ஒன்றியம், மூலனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தை துவக்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், ஒன்றிய கழக செயலாளர்கள் மூலனூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் ப.பழனிச்சாமி, துரை.தமிழரசு, பேரூர் கழக செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் தெண்டபாணி, உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஆஸ்திரேலியா

டாஸ்மானியா வேளாண்மைப் பல்கலைக்கழக பேராசிரியருடன் ஆலோசனை!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

மெல்போர்ன், ஜூலை27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப வேளாண்மை உழவர் நலத்துறையின் சார்பாக மேற்கொள்ள வேண்டிய மேம்பாட்டுப்பணிகள் தொடர்பான ஆராய்ச்சிகள், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தொழில் நுட்பங்களை பயன்படுத்துவதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பான பணிகளுக்காக வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் தலைமையிலான குழு ஆஸ்திரேலியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு அரசுமுறை பயணமாக சென்றுள்ளனர். இக்குழுவில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், வேளாண்மை உழவர் நலத் துறை மற்றும் உயர் அதிகாரிகள் உடன் சென்றுள்ளனர்.

இப்பயணத்தின் இரண்டாம் கட்டமாக நேற்று 25.07.2024 ஹோபர்ட் நகரத்தில் உள்ள டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பல்துறை வல்லுநர்களுடன் கலந்துரையாடல் மற்றும் தொழில் நுட்பங்கள் தொடர்பான கருத்து பரிமாற்றங்கள் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.

இந்த கலந்துரையாடலின் போது தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட "மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்" என்ற திட்டத்தின் தொடர்ச்சியாக தமிழக விவசாய நிலங்களின் மண் வளத்தை பெருக்கி விவசாயிகள் தரமான உணவு உற்பத்தியை செய்திட தேவையான மண் வள ஆராய்ச்சிகள் தொடர்பான உயர் தொழில் நுட்பங்கள் குறித்து, டாஸ்மானியா வேளாண்மை பல்கலைக்கழக மண்வளத் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. மேலும், அறுவடைக்குபின் ஏற்படும் இழப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் உலக வெப்பமயமாதல், பருவமற்ற காலங்களில் மழை பொழிவு,

அதி கனமழை பொழிதல், பயிர்களில் அதிக பூச்சி தாக்குதல், வறட்சி, வெள்ளம் போன்றவற்றிலிருந்து பயிர்களை காப்பது தொடர்பான முன்னெச்சரிக்கை தொழில்நுட்பங்கள் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. மின்னனு வேளாண்மை, உணவு பதப்படுத்துதல் ஆகியவற்றில் டாஸ்மானியா வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பின்பற்றப்படும் உயர் தொழில் நுட்பங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டன. மேலும், உயர் தொழில்நுட்பங்களை கொண்டு சத்தான பழவகைகள் மற்றும் காய்கறிகளை விளைவிப்பது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது. இக்கலந்தாய்வில் வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர், திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலர், செல்வி. அபூர்வா, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணை வேந்தர், பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டாஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பின்பற்றப்படும் வேளாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையைப் பெற்று தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும்.

பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

மயிலாடுதுறையில் இன்று ஆர்ப்பாட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மயிலாடுதுறை. ஜூலை 27-

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

8 முறை பிரதமர் மோடி தமிழ்நாட்டிற்கு வந்தும் பா.ஜ.க வெற்றி பெற முடியவில்லை. பா.ஜ.க. ஏமாற்றுவது 8 கோடி மக்களுக்கும் தெரியும். நமது வரிப்பணம் ஜி.எஸ்.டி. மூலமாக ஒன்றிய அரசுக்கு செல்கிறது. அதில் மாநில மாநிலங்களுக்கு ஒதுக்கபட வேண்டிய நிதி வழங்கப்படவில்லை. இவ்வாறு ஒன்றிய நிதி நிலை அறிக்கையில் மாற்றந்தாய் போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க.வை கண்டித்து அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என் கின்ற தலைமைக் கழக அறிவிப்பின் படி மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் இன்று (27.7.2024 - சனிக் கிழமை) காலை 10.00 மணிக்கு மயிலாடுதுறை தபால் நிலையம், கிட்டப்பா அங்காடி அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாககிள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொண்டு ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசிற்கு கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஆர்ப்பாட்டத்திற்கு அதிக அளவில் கழகத்தினர் கழகந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் செய்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் இன்று ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, ஜூலை 27-

தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து கிருஷ்ணகிரியில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று நடைபெறுகிறது. இதுகுறித்து கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து வருகிற ஜூலை 27 ம் தேதி சனிக்கிழமை, காலை 1000 மணியளவில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளர்கள் திரு.தே. மதியழகன் எம்எல்ஏ தலைமையில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறு உள்ளது.

இந்த ஆர்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், பஞ்சாயத்து தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், BLA 2, BLC உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தே. மதியழகன் எம்எல்ஏ, தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து - இன்று - தருமபுரி பி.எஸ்.என்.எல்.அலுவலகம் அருகில்

தருமபுரி கிழக்கு - மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்பிரமணி – முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஜூலை 27-

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க அரசைக் கண்டித்து தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் தருமபுரி பி.ஏஸ்.என்.எல். அலுவலகம் அருகில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது என மாவட்ட கழக செயலாளர்கள் தடங்கம் பெ. சுப்ரமணி, மற்றும் முனைவர்.பி.பழனி யப்பன் ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

அவர்களின் அறிக்கை வருமாறு:-

ஒரு நாட்டின் நிதிநிலை' அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச்சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதி நிலை அறிக்கை, ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை, மாறாக, தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று தமிழ் நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மற்றும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் ஆணைப்படியும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களின் ஆலோசனைப்படியும் இன்று (ஜூலை 27, சனிக்கிழமை), காலை 10.00 மணி அளவில் தருமபுரி பி.எஸ்.என்.எல். அலுவலகம் அருகில் தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.கழகம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்பாட்டம் நடைபெற உள்ளது. அதுசமயம் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி, வார்டு கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசுக்கு எதிரான கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள், தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், அன்னவாசல் தெற்கு ஒன்றியம், முக்கண்ணாமலைப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஹாஜி முஹமது அதிமுகவிலிருந்து விலகி, மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கேகே.செல்லபாண்டியன்முன்னிலையில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். நிகழ்வில், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, தலைமை பொதுக்குழு உறுப்பினர் தென்னலூர் எம்.பழனியப்பன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் எம்.செந்தில்குமார், மாவட்ட மருத்துவர் அணி தலைவர் மருத்துவர் அமானுல்லா, ஒன்றிய ஊராட்சிக்குழு உறுப்பினர் முகைதீன் பாஷா, விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன், முக்கண்ணாமலைப்பட்டி ஊராட்சி செயலாளர் மன்சூர், ஒன்றிய பிரதிநிதிகள் ஷேக் மைதீன், முகமது பாரூக், சேட்டு முகமது, சாமிக்கண்ணு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் கொத்தாம்பாடி ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே. செழியன் தொடங்கி வைத்தார். இந்த முகாமில் வருவாய் கோட்டாச்சியர் பிரியதர்ஷினி, ஒன்றிய குழு தலைவர் டாக்டர். பத்மினி பிரியதர்ஷினி, தாசில்தார் பாலாஜி, வட்டார வளர்ச்சி ஆணையாளர்கள் பரமசிவம், செந்தில், ஒன்றிய துணை செயலாளர் சசிகுமார் மற்றும் துறை சார்ந்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பாசிச ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து – இன்று

கரூர் - தபால் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம்!

"கழகத்தினர் ஆயிரக்கணக்கில் பங்கேற்போம்!" மாவட்டக் கழகம் வேண்டுகோள்!

கரூர், ஜூலை 27 -

நிதி ஒதுக்கீடு செய்யாத பாசிச பாஜக அரசை கண்டித்து கரூரில் தலைமை தபால் நிலையம் முன்பு நடைபெறும். கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னோடிகள் மற்றும் கழகத்தினர் ஆயிரக்கணக்கில் கலந்து கொள்வதென மாவட்ட கழகம் அறிக்கை விடுத்துள்ளது.

மாவட்டக் கழகம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதி நிலை அறிக்கையாகத் தெரியவில்லை மாறாக தங்களின் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியைத் தாராளமாக அள்ளிக் கொடுக்கிறது, நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்க வேண்டுமென்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கை மாற்றாந்தாய் போக்குடன் தமிழ் நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசவைக் ஜூலை 27ம் தேதி சனிக்கிழமை, காலை 10ம் தேதி கரூர் ஜவகர் பஜார் தலைமை தபால் நிலையம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி ஆலோசனைப்படி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் மற்றும் அனைத்து மாவட்ட மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழக சார்புஅணி நிர்வாகிகள் வட்ட வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகளும் கலந்து கொள்ள வேண்டும் என கரூர் மாவட்ட கழகம் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், தும்பூர் ஊராட்சி கிளைச் செயலாளரும், முன்னாள் அறங்காவலர் குழுத் தலைவருமான வேலாயுதம் அவர்களின் மறைவிற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நேரில் சென்று திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன்,நகர செயலாளர் இரா.சக்கரை, ஒன்றிய செயலாளர்கள் ஜெ.ஜெயபால், தே.முருகவேல், மு.தங்கம், ஜி.ரவிச்சந்திரன், ஒன்றிய கவுன்சிலர் செல்வம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.